# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2429/14 - 2025 මාර්තු මස 25 වැනි අඟහරුවාදා - 2025.03.25

**2429/14 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை

**2025 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல.: 4-3/23/2023/WR/87.
பிரதேச செயலாளர் குறிப்பு இல.: WEG/LAN/L9/ACQ/72.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் குரகமகே தொன் லால் காந்த ஆகிய நான், இங்கு கீழ்க் காணும் அட்டவணையின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

**கே.டி. லால் காந்த,**
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சு,
“மிஹிகத மெதுர”,
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2025, மாச்சு 19.

**அட்டவணை**

I. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், வெலிகம.

II. **காணியின் விபரம்** : தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், வெலிகம பிரதேச செலாளர் பிரிவில், இல. 406, மிரிஸ்ஸ தெற்கு 1 கிராம அலுவலர் பிரிவில், மிரிஸ்ஸ தெற்கு 1 கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2023.12.07 ஆந் திகதிய MR/WLG/2023/396 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள்:

**01. துண்டு ‘A’ - தொம்பகஹவத்தை மற்றும் தொம்பகஹ கொரட்டுவ அல்லது தொடம்கஹவத்தை - விஸ்தீரணம் : 0.1963 ஹெக்டயார்**

வடக்கு : புனம் கிரஸ்தோம்புகே ஷிராணி உரிமைகோரும் தெவராஹென்னதிகெவத்தை, சவுந்ரா ஹென்னதிகே ஹேமாவதி உரிமைகோரும் பொகுணேவத்தை, கலபத்திகே பிரசன்ன உரிமைகோரும் பொகுணேவத்தை மற்றும் உரிமைகோருவோர் கண்டுபிடிக்க முடியாத கொட்டகஹவத்தை; கிழக்கு : உரிமைகோருவோர் கண்டு பிடிக்க முடியாத நதோகெ அம்மகெவத்தை அல்லது பரணகெதரவத்தை மற்றும் வீதி; தெற்கு : வீதி; மேற்கு : சமிந்த புஞ்சிஹேவா உரிமைகோரும் தும்போடிகெவத்தை அல்லது தெவராஹென்னதிகெவத்தை, உரிமைகோருவோர் கண்டுபிடிக்க முடியாத தும்போடிகெவத்தை அல்லது தெவராஹென்னகெவத்தை, துறைமுக வீதி, எச்.எச். பெதும் சஞ்சீவ உரிமைகோரும் தொம்பகஹகொரட்டுவ அல்லது தொடம்கஹவத்தை மற்றும் புனம் கிரஸ்தோம்புகே ஷிராணி உரிமைகோரும் தெவராஹென்னதிகெவத்தை.

EOG 03 - 0226